பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை
20 08 2024 7 15
செவ்வாய்கிழமை இரவு

<u>தலைப்புச் செய்திகள் -</u>

1. வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்ட கனிம உற்பத்தியில் சுயசார்பை எட்ட வேண்டியது அவசியம் என குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.
2. இந்தியாவுக்கும் - மலேசியாவுக்கும் இடையே வேலைவாய்ப்பு, டிஜிட்டல் தொழில்நுட்பம் உள்ளிட்ட ஒன்பது துறைகளில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் இன்று கையெழுத்தாகின.
3. நேரடி நியமனங்கள் மூலம் மத்திய அரசு பணிகளில் அதிகாரிகளை நியமிக்கும் அறிவிக்கையை ரத்து செய்ய உத்தரவிடப்பட்டுள்ளதாக மத்திய இணை அமைச்சா திரு ஜிதேந்திரசிங் கூறியுள்ளார்.
4. மத்திய அரசின் நடவடிக்கைகள் காரணமாக நாட்டில் உணவு பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதாக உணவு அமைச்சர் திரு பிரல்ஹத் ஜோஷி தெரிவித்துள்ளார்.
5. நாட்டின் வடகிழக்கு மாநிலங்களில் ஒரு சில பகுதிகளில் அடுத்த இரண்டு நாட்களுக்கு அதி கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<u>இனி விரிவான செய்திகள் ---</u>

**[]<<<>>>[]**

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்ட கனிம உற்பத்தியில் சுயசார்பை எட்ட வேண்டியது அவசியம் என குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் புவி அறிவியல் விருதுகளை வழங்கி பேசிய அவர், கனிம வளங்களை வெட்டி எடுக்கும் பணியில் செயற்கை நுண்ணவு மற்றும் நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தவது வரவேற்கத்தக்கது என்றார்.

வெள்ளம், நிலச்சரிவு போன்ற இயற்கை பேரிடர்களை மேலும் துல்லியமாக கணிக்க வேண்டியது அவசியம் என்று குடியரசுத் தலைவர் வலியுறுத்தினார். இதன்மூலம் சேதங்களை குறைக்க முடியும் என்ற அவர் கூறினார்.

கார்பன் வெளியேற்றம் இல்லாத நிலையை இந்தியா அடைவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

நீடித்த வளர்ச்சியை நோக்கி இந்தியா பயணிப்பதாகவும் திருமதி திரௌபதி முர்மு குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

இந்தியாவுக்கும் - மலேசியாவுவுக்கும் இடையே இருதரப்பு ஒத்துழைப்பு மேலும் வலுப்படுத்தப்படும் என்று பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.

இந்தியா வந்துள்ள மலேசிய பிரதமர் திரு அன்வர் பின் இப்ராஹிம் புதுதில்லியில் இன்று பிரதமர் திரு நரேந்திரமோடியை சந்தித்து பேச்சு நடத்தினார்.

உயர்நிலைக்குழு அளவிலான பேச்சுவார்த்தைக்குப் பின் இரு தலைவர்களும் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தனர்.

இந்த பேச்சுவார்த்தை ஆக்கப்பூர்வமாக அமைந்ததாக திரு நரேந்திரமோடி தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையே பொருளாதார ஒத்துழைப்புக்கு மேலும் கூடுதல் வாய்ப்புகள் உள்ளதாக அவர் கூறினார்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் இரு நாடுகளுக்கும் இடையேயான இருதரப்பு ஒத்துழைப்பில் புதிய உத்வேகம் ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

செமி கண்டக்டர், செயற்கை நுண்ணறிவு, குவாண்டம் தொழில்நுட்பம் போன்ற துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்த வேண்டியது அவசியம் என்று திரு நரேந்திரமோடி வலியுறுத்தினார்.

இந்த செய்தியாளர் சந்திப்பில் பேசிய மலேசிய பிரதமர் திரு அன்வர் பின் இப்ராஹிம், இரு நாடுகளும் வளமான வரலாறு மற்றும் கலாச்சார பாரம்பரியத்தை கொண்டுள்ளதாகத் தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையேயான முதலீடு தற்போது ஐந்து மில்லியன் டாலரை எட்டியுள்ளது என்றும், இது மேலும் அதிகரிக்கும் என்றும் கூறினார்.

இந்த சந்திப்புக்குப் பின்னர் தொழிலாளர் நலன், வேலைவாய்ப்பு, பாரம்பரிய மருத்துவ முறைகள், டிஜிட்டல் தொழில்நுட்பம், கலாச்சாரம், சுற்றுலா, விளையாட்டு, நிர்வாக சீர்திருத்தம் உள்ளிட்ட துறைகளில் ஒன்பது புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

மலேசிய பல்கலைக்கழகத்தில் திருவள்ளுவர் இருக்கை அமைப்பது தொடர்பான ஒப்பந்தமும் கையெழுத்தானது.

**[]<<<>>>[]**

மத்திய அரசு துறைகளில் நேரடி நியமனங்கள் மூலம் அதிகாரிகளை நியமிக்கும் அறிவிக்கையை ரத்து செய்யுமாறு மத்திய பணியாளர் தேர்வாணையத்துக்கு, மத்திய பணியாளர் நலத்துறை இணை அமைச்சர் திரு ஜிதேந்திரசிங் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக அந்த ஆணையத்துக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், இந்த நேரடி நியமன முறையில் இடஒதுக்கீட்டு கொள்கை கடைபிடிக்க வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

2013-ஆம் ஆண்டு முந்தைய அரசால் பரிந்துரைக்கப்பட்ட இதில் வெளிப்படைத்தன்மை இல்லை என்று அவர் கூறியுள்ளார்.

சமூக நீதியை நிலைநிறுத்துவது மிக முக்கியமானது என்றும், இதில் பிரதமர் திரு நரேந்திரமோடி உறுதியுடன் உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பின்தங்கிய சமூகங்களை சேர்ந்தவர்கள் அரசு பணிகளில் பிரதிநிதித்துவம் பெற வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு இந்த நேரடி நியமன அறிவிக்கையை ரத்து செய்யுமாறு அந்த கடிதத்தில் திரு ஜிதேந்திரசிங் கேட்டுக் கொண்டுள்ளார்.

**[]<<<>>>[]**

மத்திய அரசு பணிகளில் நேரடிய நியமன நடைமுறை மூலம் அதிகாரிகளை நியமிப்பது ரத்து செய்யப்பட்டுள்ளது சமூக நீதியை காக்க மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதை எடுத்துக்காட்டுவதாக தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், பின்தங்கிய சமூகங்களின் முன்னேற்றத்தை கருத்தில் கொண்டே பிரதமர் திரு நரேந்திரமேடி எப்போதும் செயல்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

சமூக நீதியை நிலைநாட்டும் வகையில் மத்திய அரசு செயல்படுவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் திரு எல் முருகன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று மாலை செய்தியாளர்களிடம் பேசிய அவர், மலேசிய பல்கலைக்கழகத்தில் திருவள்ளுவர் இருக்கையை அமைக்க நடவடிக்கை எடுத்ததற்காக பிரதமருக்கு நன்றி தெரிவித்தார்.

*( சவுண்ட்பைட் - எல் முருகன் ) ---50 செகண்ட்*

**[]<<<>>>[]**

மத்திய அரசின் நடவடிக்கைகள் காரணமாக நாட்டில் உணவு பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதாக மத்திய உணவு அமைச்சர் திரு பிரல்ஹத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

குஜராத், ராஜஸ்தான், தெலங்கான மற்றும் உத்திரபிரதேசத்தில் 60 நியாய விலைக் கடைகளை ஊட்டச்சத்து மையமாக மாற்றும் முன்னோடி திட்டத்தை காணொலி வாயிலாக அவர் இன்று தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர், இந்த மையங்கள் ஊட்டச்சத்து நிறைந்த உணவுப் பொருட்களை மக்களுக்கு வழங்கும் என்று கூறினார்.

பிரதமரின் கரிப் கல்யாண் திட்டத்திற்கு 12 லட்சம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இத்திட்டம் ஐந்து ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

ஒரே நாடு ஒரே குடும்ப அட்டை திட்டம் தடையற்ற வகையில் உணவு தானியங்களைப்பெற வழிவகுத்துள்ளது என்று திரு பிரல்ஹத் ஜோஷி தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் 80-வது பிறந்தநாள் இன்று கொண்டாடப்பட்டது.

பிரதமர் திரு நரேந்திர மோடி, ராஜீவ்காந்தியின் பிறந்த நாளில் அவருக்கு மரியாதை செலுத்துவதாக சமூக வலைதள பதிவில் குறிப்பிட்டுள்ளார்,

தில்லியில் உள்ள ராஜீவ்காந்தி நினைவிடத்தில் காங்கிரஸ் மூத்த தலைவர் திருமதி சோனியாகாந்தி, மக்களவை எதிர்க்கட்சித்தலைவர் திரு ராகுல்காந்தி உள்ளிட்டோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

தமிழகத்தில் ஸ்ரீபெரும்புதூரில் உள்ள ராஜீவ்காந்தி நினைவிடத்தில், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி திரு செல்வப்பெருந்தகை மற்றும் அக்கட்சியின் மூத்த தலைவர்கள் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

**[]<<<>>>[]**

மருத்துவர்களுக்கான பாதுகாப்பை உறுதி செய்ய தேசிய அளவில் பணிக்குழு ஒன்றை உச்சநீதிமன்றம் அமைத்துள்ளது.

கொல்கத்தாவில் பெண் மருத்துவர் படுகொலை செய்யப்பட்டது தொடர்பான வழக்கை தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுத்துக் கொண்ட தலைமை நீதிபதி திரு சந்திரசூட் தலைமையிலான அமர்வு, இந்த பணிக்குழு மூன்றுவார காலத்திற்குள் இடைக்கால அறிக்கையும், மூன்று மாதத்திற்குள் இறுதி அறிக்கையையும் தாக்கல் செய்ய வேண்டுமென்று உத்தரவிட்டது.

மருத்துவர்களுக்கு எதிரான வன்முறையை தடுப்பது, மருத்துவமனை வளாகத்தில் பாதுகாப்பை உறுதி செய்வது, உள்கட்டமைப்பை மேம்படுத்துதல், போக்குவரத்து உள்ளிட்ட அம்சங்கள் குறித்து இந்த பணிக்குழு ஆய்வு செய்யும் என்று தெரிவித்தது.

இதனிடையே தில்லியில் உள்ள ராம் மனோகர் லோகியா மருத்துவமனை மருத்துவர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தை திரும்பப் பெறுவதாக அறிவித்துள்ளனர்.

**[]<<<>>>[]**

நாட்டில் கடந்த நிதி ஆண்டில் தொலைத் தொடர்புத்துறை மிகப்பெரிய வளர்ச்சியை எட்டியுள்ளதாக தொலைத் தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் தெரிவித்துள்ளது.

அந்த ஆணையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த ஆண்டில் ஏழு கோடியே 30 லட்சம் இணைய சந்தாதாரர்களும், ஏழு கோடியே 70 லட்சம் பிராட் பேண்ட் சந்தாதாரர்களும் புதிதாக இணைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு தொலைத்தொடர்பு சந்தாதரர்களின் எண்ணிக்கை இரண்டு புள்ளி மூன்று சதவீதம் அதிகரித்துள்ளதாகவும், வருவாய் எட்டு புள்ளி இரண்டு நான்கு சதவீதமும் உயர்ந்துள்ளது என்றும் தொலைத் தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் கூறியுள்ளது.

**[]<<<>>>[]**

குரங்கு அம்மை நோயால் பாதிக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கக்ப்படும் நோயாளிகளை கையாளுவதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை தில்லி எய்ம்ஸ் மருந்துவமனை வெளியிட்டுள்ளது.

ஏற்கனவே இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களுடன் தொடர்பில் இருந்தவர்களுக்கு காய்ச்சல் உள்ளிட்ட அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக அவர்களுக்கு பரிசோதனைகள் மற்றும் தனிமைப்படுத்துதல் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

தில்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் குரங்கு அம்மை நோய்க்காக ஐந்து படுக்கைகள் தனியாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த மருத்துவமனை கூறியுள்ளது.

தில்லி சப்தர்ஜங் மருத்துவமனையிலும் சிறப்பு சிகிச்சை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அந்த மருத்துவமனை தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

ஜம்மு-கஷ்மீர் சட்டப்பேரவைத் தேர்தலில் முதல்கட்ட வாக்குப்பதிவுக்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்கியது.

வேட்பு மனுக்களை தாக்கல் செய்ய இம்மாதம் 27-ஆம் தேதி கடைசி நாளாகும்..

புல்வாமா, அனந்தநாக், சோபியான், குல்காம், ராம்பன், ஹிஸ்துவார் மற்றும் தோடா மாவட்டங்களில் உள்ள 24 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு அடுத்த மாதம் 21-ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

**[]<<<>>>[]**

உக்ரைன் எல்லையையொட்டிய பகுதிகளிலிருந்து ஒரு லட்சத்து 20 ஆயிரம் பேர் வெளியேற்றப்பட்டுள்ளதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

**Kursk** பகுதியிலிருந்து ஒன்பது எல்லை மாவட்டங்களில் உக்ரைன் உடனான சண்டை தொடர்வதாக ரஷ்யா கூறியுள்ளது.

இதனிடையே உக்ரைனின் கிழக்கு டொனக்ஸ் பகுதியில் ரஷ்யா தொடர்ந்து முன்னேறி வருவதையடுத்து, அப்பகுதியைவிட்டு வெளியேறுமாறு அங்குள்ள மக்களை உக்ரைன் கேட்டுக் கொண்டுள்ளது.

உக்ரைனின் **Zalizne** டநகரை ஏற்கனவே கைப்பற்றிவிட்டதாக ரஷ்யா கூறியுள்ளது.

**[]<<<>>>[]**

நாட்டின் வடகிழக்கு மாநிலங்களில் ஒரு சில பகுதிகளில் அடுத்த இரண்டு நாட்களுக்கு அதி கனமழை பெய்யக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேற்குவங்கம், ஒடிஸா, பீகார், ஜார்க்கண்ட் ஆகிய மாநிலங்களின் சில இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாகவும் அது கூறியுள்ளது.,

தமிழ்நாடு, கேரளா மாநிலங்களின் சில இடங்களில் கன முதல ்மின கனமழை வரை பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

பாரிஸில் நடைபெறவுள்ள பாராலிம்பிக்ஸ் போட்டியில் பங்கேற்கும் இந்திய குழுவுக்கு திரு சத்திய பிரகாஷ் சங்குவான் தலைமை வகிப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பாரா விளையாட்டுப் போட்டிகளில் மிகுந்த அனுபவம் பெற்ற அவர், இந்திய குழுவை வழி நடத்துவார் என இந்திய பாராலிம்பிக் கமிட்டி தெரிவித்துள்ளது.

**<u>End of News</u>**